செ.வெ.எண்: 291 நாள்:03.05.2018

**தமிழ்நாடுஅரசு**
**(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை)**
**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்**
**மகளிர் திட்டம், திருநெல்வேலி**

# வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தனியார் நிறுவன வேலைவாய்ப்பு முகாம்

**(தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு)**

---

திருநெல்வேலி மாவட்டம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் 2017-18–ஆம் ஆண்டிற்கு, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் ஊரக இளையோர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் மாவட்டம் மற்றும் வட்டார அளவில் முகாம் நடத்தி அதன் மூலம் தகுதியான அளவில் ஊதியம் கிடைத்திட வழி நடத்திடும் பொருட்டு, DDU-GKY திட்டத்தின் கீழ் 2017-18–ம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தை உள்ளடக்கி வேலைவாய்ப்பு முகாம் நடத்தப்பட உள்ளது. அதன்படி 05.05.2018 அன்று பாளையங்கோட்டை வட்டாரத்தில் அருண்ஸ் மஹாலில் வைத்து மேற்படி முகாம் நடைபெற உள்ளது. இம்முகாமில் 30க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள், தங்கள் நிறுவனத்தில் பணிபுரிவதற்கு தேவையானவர்களைத் தேர்வு செய்ய உள்ளனர். 5ம் வகுப்பு முதல் பட்டபடிப்பு வரை படித்த, ITI, Diploma பயிற்சி பெற்ற மற்றும் பெறாத 18 முதல் 40 வயதுக்குட்பட்ட மாவட்டத்தின் அனைத்து வட்டார ஊரக மற்றும் நகர்புற பகுதி மற்றும் மாவட்டத்தில் பிறபகுதிகளைச் சார்ந்த ஆண்/பெண் இருபாலரும் இம்முகாமில் பங்கேற்கலாம்.

விருப்பமுள்ள நபர்கள் 05.05.2018 (சனிக்கிழமை) **காலை 09.00** மணிக்கு பாளையங்கோட்டை வட்டாரத்தில் விண்ணப்பப் படிவத்தினை நேரடியாகப் பெற்று தங்கள் விபரங்களைப் பதிவு செய்து வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொள்ளலாம். மேலும், அனைவரும் தங்களது கல்வி சான்று மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றின் **அசல்** மற்றும் நகல் உள்ளிட்ட இதர சான்றுகளுடன் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறார்கள்.

**தொடர்புக்கு**

| தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் | வட்டார வளர்ச்சி அலுவலகம் ( வ.ஊ) |
|---|---|
| மாவட்ட ஆட்சியர் வளாகம்,<br>(காவல் ஆணையர் அலுவலக பழைய கட்டிடம், முதல்தளம்),<br>திருநெல்வேலி தொலைபேசிஎண் : 0462 / 2500302, 2500303 | பாளையங்கோட்டை<br>தொலைபேசி எண்கள்: 0462- 2572092 |

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**